# பத்திரிக்கை செய்தி

**மிஷன் வத்சல்யா திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் தேர்விற்கான விண்ணப்பங்கள் வரவேற்பு - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரத்திக் தாயள், இ.ஆ.ப அவர்கள் தகவல்.**

மிஷன் வத்சல்யா திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி இளைஞர் நீதி குழுமத்தில் ஒரு வருட தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற கீழ்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**உதவியாளர் உடன் இணைந்த அமர்வு எழுத்தர் /Assistant cum Bench Clerk (01 பணியிடம்) தொகுப்பூதியம் ரூ. 25,000/- (ஒரு மாதத்திற்கு)**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் வழங்கப்படும் அறிவியல், கலை, வணிகவியல், பொறியியல், மருத்துவம் அல்லது வேறு ஏதேனும் துறையில் இளங்கலைபட்டம் பெற்றிருக்க வேண்டும். (10+2+3 அல்லது 11+1+3 முறையில் இருக்க வேண்டும்)
- அரசு அங்கீகாரம் பெற்ற Computer on Office Automation கணினி கல்வியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- அரசு/ அரசுஅங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் Diploma/Degree கணினி கல்வியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- கணினி இயக்கும்பணியில் முன் அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- 01.09.2026 அன்றுபடி 42 வயதிற்கு பூர்த்தி அடையாதவர்களாக இருக்க வேண்டும்.

- Bachelor's Degree in Science, Arts, Commerce, Engineering, Medicine, or any other discipline from a recognized University in Indian Union. The degree should have been obtained under the 10+2+3 or 11+1+3 pattern of education.
- The candidate **Must have passed a** Computer on Office Automation **recognized by the Government.**
- The candidate **Must possess a Diploma or Degree in Computer Education from a Government or Government-recognized institution.**
- Preference will be given to candidates who have prior experience in computer operations.
- The candidate should not have completed 42 years of age as on the 01.09.2026.

**இளநிலை உதவியாளர் உடன் இணைந்த பதிவேடு எழுத்தர் /Junior Assistant cum Record Clerk (01 பணியிடம்) தொகுப்பூதியம் ரூ. 20,000/- (ஒரு மாதத்திற்கு)**

- அரசு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வெண்டும்
- 01.09.2026 அன்றுபடி 42 வயதிற்கு பூர்த்தி அடையாதவர்களாக இருக்க வேண்டும்.

- The candidate must have passed the 10th Standard (SSLC) from a Government or Government-recognized school, or possess an equivalent qualification.
- The candidate should not have completed 42 years of age as on the 01.09.2026.

**அலுவலக உதவியாளர் /Office Assistant (01 பணியிடம்) தொகுப்பூதியம் ரூ.13,000/- (ஒரு மாதத்திற்கு)**

- அரசு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வெண்டும்
- 01.09.2026 அன்றுபடி 42 வயதிற்கு பூர்த்தி அடையாதவர்களாக இருக்க வேண்டும்.

- The candidate must have passed the 8th Standard from a Government or Government-recognized school, or possess an equivalent qualification
- The candidate should not have completed 42 years of age as on the 01.09.2026.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், சுயசான்றொப்பமிட்ட கல்விச்சான்றுகளின் நகல், பணி அனுபவ சான்றுகளின் நகல் இணைக்கப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள், உரிய சான்றிதழ்களின் நகல் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். மேற்கண்ட பணியிடங்கள் தற்காலிகமான மதிப்பூதிய அடிப்படையிலானது.

**விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் தனிதனியாக விண்ணப்பிக்க வேண்டும். ஒரே விண்ணப்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பணியிடங்களுக்கு விண்ணபிக்கும் விண்ணப்பங்கள் எந்த ஒரு முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.**

மேற்கண்ட பதவிகளுக்கான விண்ணப்படிவத்தினை https://tiruchirappalli.nic.in/ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் 23/9/26 முதல் 7/10/26 அன்று மாலை 5.30 மணிக்குள் கீழ்காணும் முகவரிக்கு வந்து சேரும் வகையில் (நேரிலோ/தபால் மூலமாகவோ) அனுப்பப்பட வேண்டும்.

மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,
N.E.1, முதல் தளம், மெக்டொனால்டு ரோடு,
கலையரங்கம் வளாகம்,
திருச்சிராப்பள்ளி - 620 001.

மேலும் விபரங்களுக்கு 0431-2413055 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரம் பெறலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

19/9

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,
திருச்சிராப்பள்ளி. 2/2

18.09.26
மா.மேலா.